
மாலை முரசு

பக்கங்கள் 16+ 02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை 28.09.2025 | அதிர்வு 59

## மட்டக்களப்பில் 13 வயது சிறுமி உயிர்மாய்ப்பு!



(மட்டக்களப்பு நிருபர்கள்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் 13 வயது சிறுமி ஒருவர் உயிர்மாய்த்துள்ளார். 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மன்னாரில் நாளை பொது முடக்கம்!

## சகல தரப்பினரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலைத் திட்டத்துக்கு எதிராகவும், மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும் நாளை திங்கட்கிழமை மன்னார் மாவட்டத்தில் பொது முடக்கப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் பொது முடக்கப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார். 04

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் இன்று இந்திய மீனவர்கள் 12 பேர் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவின், பாண்டிச்சேரியைச் சேர்ந்த 12 மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்பில் ஒரு படகில் மீன்பிடியில் ஈடுபட்ட சமயமே கடற்படையினரால் இன்று காலை கைது செய்யப்பட் 04





# யாழ்ப்பாணத்தில் விக்சித் பாரத் ஓட்டம்

இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற 'யாழ்ப்பாணம் விக்சித் பாரத் ஓட்டம் 2025' இன் நிகழ்வில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி ஆகியோர் கலந்துகொண்டு, ஓட்ட நிகழ்வைத்

**(03ஆம் பக்கம் பார்க்க)**











# யாழ்ப்பாணத்தில் விக்சித் பாரத் ஓட்டம்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
தொடக்கி வைத்ததுடன் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தனர்.

உலகளாவிய அளவில் 150 இற்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்ற விக்சித் பாரத் ஓட்டம் 2025, இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தை கொண்டாடுவதோடு, சேவை, மனவொற்றுமை மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்து, உலகம் முழுவதும் சமூகங்களை இணைக்கும். இந்தியாவின் முன்னேற்றத்தையும் பண்பாட்டு மதிப்புகளையும் இந்த நிகழ்ச்சி வெளிப்படுத்தியுள்ளது.


















# லண்டனில் தியாகி திலீபனின் நினைவேந்தல்

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு லண்டனில் நடைபெற்றது.

தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் தமிழர் ஒருங்கிணைப்பு குழு என்பவற்றின் ஏற்பாட்டில் லண்டன், டவுனிங் தெருவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றதுடன், தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

# வயோதிபப் பெண்ணொருவர் பஸ் மோதி பரிதாப உயிரிழப்பு

வீதியில் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணொருவர், பஸ் மோதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி, ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்கம சந்திக்கு அருகில், காலியில் இருந்து ஹிக்கடுவை நோக்கிச் சென்ற பஸ் மோதியதில் இந்தப் உயிரிழந் துள்ளார்.

காலியில் இருந்து ஹிக்கடுவை நோக்கிச் சென்ற பஸ், நடைபாதையில் சென்று கொண்டிருந்த பெண் பாதசாரி மீது நேற்று மோதி விபத்துக்குள்ளானதில் அந்தப் பெண் காயமடைந்தார். அவர் காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த பெண், பூஸா பகுதியைச் சேர்ந்த 77 வயதுடையவர் எனபி பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சடலம் காலி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் ரத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் தந்தை வெளிநாட்டில் வேலை செய்து வரும் நிலையில் தாயுடன் இந்தச் சிறுமியும் அவரது இரட்டைச் சகோதரிகளும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் வெளிநாட்டில் இருந்து தந்தை, இரட்டைச் சகோதரிகளுக்கு ஆடைகள் வாங்குவதற்குப் பணம் அனுப்பியுள்ளார்.

அடுத்த மாதம் தான் நாட்டுக்குத் திரும்பி வந்ததும் மேற்படி சிறுமிக்கு ஆடைகள் வாங்குவதற்குப் பணம் தருவதாகத் தந்தை கூறியுள்ளார்.

இதனையடுத்து தனக்கு ஆடைகள் வாங்கத் தந்தை பணம் அனுப்பவில்லை எனக் கோபமடைந்த சிறுமி நேற்று மாலை 5.45 மணியளவில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

அவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் தற்கொலை செய்பவர்களின் பட்டியலில் மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரை 48 பெண்கள் உட்பட 172 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை 12 வயது சிறுவன் ஒருவர், 26 பெண்கள் உட்பட 105 பேர் கடந்த 8 மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று பொலிஸாரின் மாவட்ட தரவுகள் மூலம் தெரியவருகின்றது.

## நெடுந்தீவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

அவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி 12 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக இன்று ஞாயிற்றுக்கிழமை 57 ஆவது நாளாகப் போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் அங்கு நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மன்னார் மாவட்டம் முழுவதும் நாளை திங்கட்கிழமை பொது முடக்கப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம் . அனைத்து செயற்பாடுகளையும் முழுமையாக நிறுத்தி சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் பொதுப் போக்குவரத்து கள் அனைத்தையும் நிறுத்தி, வர்த்தக நிலையங்களை மூடி மாவட்டத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுகின்றவர்கள் நாளை திங்கட்கிழமை கடமைகளுக்குச் செல்லாது எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டனப் பேரணி ஆரம்பமாகும். இந்தப் பேரணி மன்னார் பஜார் பகுதியை வந்தடையும். பின்னர் அங்கு எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்படும்.

இந்தப் போராட்டம் மதியம் 1.30 மணி வரை முன்னெடுக்கப்படும். போராட்டத்தின் இறுதியில் எமது கோரிக்கை அடங்கிய மகஜரை ஜனாதிபதிக்குக் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரச அதிபருக்குக் கையளிக்கப்படும்.


எனவே, மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்படும் எமது உரிமைக்கான போராட்டத்தில் மீனவர்கள், வர்த்தகர்கள், பொதுப் போக்குவரத்து சேவையை முன்னெடுப்போர் உள்ளடங்களாக அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டு பூரண ஆதரவை வழங்க வேண்டும்." - என்றார்.

# பொறியியல் துறையில் சிரேஷ்ட பேராசிரியராகப் பதவி உயர்வு!

(அஸ்லாம் மௌலானா)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தின் பேராசிரியர் ஏ.எம். முஸாதிக், சிரேஷ்ட பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் வழங்கப்பட்டுள்ள இந்தப் பதவி உயர்வின் மூலம், அவர் இலங்கையில் பொறியியல் துறையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவியை அடைந்த முதலாவது முஸ்லிம் கல்வி யியலாளர் என்ற வரலாற்றுச் சாத



னையைப் படைத்துள்ளார்.

எந்திரவியல் பொறியியல் துறையில் சிறப்பாகப் பணியாற்றும் பேராசிரியர் முஸாதிக், பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் கற் பித்தல், ஆராய்ச்சி, நிர்வாகப் பொறுப் புகள் உள்ளிட்ட துறைகளில் தனது பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

அவர் வெளியிட்ட பல்தரப்பட்ட சர்வ தேச ஆராய்ச்சி கட்டுரைகள், சமூக மேம் பாட்டுக்கான பங்களிப்புகள் மற்றும் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கிய வழிகாட்டுதல்கள் இவரது கல்விசார் பயணத்தைச் சிறப்பாக மாற்றியுள்ளதாகப் பாராட்டுத் தெரிவிக்கப்படுகின்றது.



### குருநாகல் கேபிள் கார் விபத்து:

# சிகிச்சை பெற்று வந்த பிக்கு ஒருவர் மரணம்!

### உயிரிழப்பு எண்ணிக்கை 8 ஆக அதிகரிப்பு

குருநாகல், மெல்சிறிபுர நா உயன ஆரண்ய சேனாசனத்தில் அண்மையில் இடம்பெற்ற கேபிள் கார் விபத்தில் சிகிச்சை பெற்று வந்த பிக்கு ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று ஞாயிற் றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

அதற்மைய இந்த விபத்தில் உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

நா உயன ஆரண்ய சேனாசனத்தின் மடங்களுக்கு இடையே போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்ட கேபிள் கார் உடைந்து வீழ்ந்த விபத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த 7 பிக்குகள் முன் னதாக உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் ரஷ்யா, ருமே னியா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த மூன்று வெளிநாட்டுப் பிக்குகளும் அடங் குவர்.

உயிரிழந்த உள்நாட்டுப் பிக்குகளின் இறுதிக்கிரியைகள் நேற்று சனிக்கிழமை நடைபெற்றன.

இதேவேளை, இந்த விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த 5 பிக்குகள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.






### சர்வதேச நீதிக்கான சுழற்சி முறையிலான

# உண்ணாவிரதப் போராட்டம் நேற்று கிழக்கிலும் ஆரம்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச நீதிக்கான சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் வடக்கில் யாழ்ப்பாணம் – செம்மணியில் நடைபெற்று வரும் நிலையில், கிழக்கில் அம்பாறை – திருக்கோவில், தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாகவும் அந்தப் போராட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ளது.



வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் இலங்கையின் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழின அழிப்பு,வலிந்து காணாமல் ஆக்கப் படுதல், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் எனும் தொனிப் பொருளுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்தில் அதிகளவிலான பொதுமக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் கலந்துகொண்டுள்ளனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிங்கள அரசுகளின் போக்கு

ஐக்கிய நாடுகள் சபையின் பொது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அங்கு வதியும் இலங்கையர்களைச் சந்தித்து பேசிய போது ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் விசாரணைகள் குறித்து சில புதிய தகவல்களை வெளியிட்டு இருக்கிறார்.

2019 இல் நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பாக "எதிர்காலத்தில் ஒன்று அல்லது இரண்டு முன்னாள் இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்படுவார்கள்" என்று அவர் கூறியிருக்கின்றார்.

தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிப்பதில் தற்போதைய விசாரணைகள் கவனம் செலுத்துகின்றன என்றும், தாக்குதல்கள் தொடர்பான கடந்தகால விசாரணைகள் தோல்வியடைந்துள்ளன என்றும், எனவே புதிய விசாரணைகள் அவசியம் என்றும் அவர் கூறினார்.

"தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கத் தவறியதற்கு அரசியல் ஒரு முக்கிய காரணம். ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று சந்தேகிக் கப்படும் நபர்கள் விரைவில் ஆட்சிக்கு வந்தனர். தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் உயர் பதவிகளை வகிப்பவர்களாகவும் கண்டறியப்பட்டனர்" என்று அவர் குற்றம் சாட்டினார்.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்குவதற்காக யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் இன வழிப்பு நடவடிக்கைகளில் இலங்கைப் படைகள் ஈடுபட்டன என்ற குற்றச்சாட்டு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பொது அமர்வில் தீர்மானங்கள் மேல் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டு, சுட்டிக்காட்டப்பட்டு, அவை குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட போதெல்லாம் அதை அடியோடு மறுத்து நின்றன மாறி மாறி வந்த சிங்கள அரசுகள்.

சிங்களப் படைகளுக்கு எதிராக எந்த விசாரணையையும் நடத்த மாட்டோம் என்று ஒற்றைக் காலில் நின்றவர்கள்தான் இந்த ஜே.வி.பியினர் உட்பட்ட பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுத் தரப்பினர்.

இப்போது தாங்களே பயங்கரவாத நடவடிக்கை என்று அடையாளப்படுத்திய ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலோடு தொடர்பு பட்டுள்ள ஒரு சில இராணுவ அதிகாரிகளைக் கைது செய்வது பற்றி பேச முற்பட்டிருக்கின்றனர்.

தங்களுக்கு தங்களுக்கு என்று அரசியலாக வரும்போது கோட்பாடுகளை விட்டுக் கொடுத்து, படை அதிகாரிகளை கைது செய்ய விரும்பும் அரசியல் தலைமைகள், இனவாத விவகாரமாக வரும் போது மட்டும் நீதி, நியாயம், உண்மை, நேர்மை எல்லாவற்றையும் புறமொதுக்கிவிட்டு பேரினவாதப் படைகளைக் காப்பாற்ற முற்பட்டு விடுகின்றன.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் என்ற பயங்கரவாத நடவடிக்கைக்கு உதவுவதில் படை அதிகாரிகள் சம்பந்தப்பட்டார்கள் என்று நம்பும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்குவதற்கு அரச பயங்கரவாதம் பேயுருக் கொண்டு சந்நதம் ஆடியது என்பதை மட்டும் முழுமையாக அறிந்து கொண்டிருந்தும், அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

எது, எப்படியாயினும் தங்களது சிங்களப் படை அதிகாரிகளின் சீத்துவத்தை இப்போதாவது தென்னிலங்கை அரசுத் தலைமைகள் தங்கள் அரசியல் லாபம் கருதியாவது ஒப்புக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் நிலைமை வந்திருப்பது நல்லதுதான்.

இதே பாணியில் தமிழர்களுக்கு எதிராகப் பேரழிவுக் குற்றங்களைப் புரிந்த சிங்கள - பௌத்த படைகளுக்கு எதிராகவும் இலங்கை அரசு குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும்.




# கொழும்பில் விக்சித் பாரத் ஓட்டம்

இந்தியா – இலங்கை, முன்னேற்றத்தில் பங்குதாரர்களாக உள்ளவர்களைக் கொண்டு இந்தியாவின் உயர்ஸ்தானிகராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ”விக்சித் பாரத் ஓட்டம்” இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு – காலிமுகத்திடலில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட இலங்

**(09ஆம் பக்கம் பார்க்க)**















# கொழும்பில் விக்சித் பாரத் ஓட்டம்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, விக்சித் பாரத் ஓட்டத்தை கொடி அசைத்து ஆரம்பித்து' வைத்தார். இந்த நிகழ்வில் பலர் கலந்துகொண்டார்கள்.






















# ரயில் மோதியதில் இயந்திரம் பகுதியில் சிக்கிய பெண் படுகாயங்களுடன் மீட்பு!

(மஸ்கெலியா நிருபர்)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் மோதியதில் அந்த ரயிலின் இயந்திரம் பகுதியில் சிக்கிக் கொண்ட பெண் ஒருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டார்

இந்த விபத்து ஹட்டன் – மல்லியப்பு சந்திக்கு அருகில் இன்று மதியம் 1:30 மணியளவில் இடம்பெற்றது.

ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள மல்லியப்பு சந்திக்கு அருகில் உள்ள பிரதான ரயில் சாலையில் இருந்து ரயில் வந்து கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்தது.

படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட பெண், கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த விபத்து காரணமாக ரயிலில் நீண்ட நேரம் மக்கள் காத்திருக்க நேரிட்டது என ரயில்வே ஊழியர்கள் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் ஹட்டன் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.







# கேகாலையில் ரயில் மோதி 14 வயது சிறுவன் மரணம்!

ரயில் மோதி சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேகாலை மாவட்டம், ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திஸ்மல்பொல ரயில் நிலையத்தில் பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயிலில் மோதியே மேற்படி சிறுவன் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் மெதகம பகுதியைச் சேர்ந்த 14 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



ரம்புக்கனையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயிலில் திஸ்மல்பொல ரயில் நிலையத்துக்கு நண்பர்களுடன் இந்தச் சிறுவன் சென்றுள்ளார்.

இதன்போது, ரயில் கடவையில் இறங்கி அடுத்து ரயில் மேடைக்கு இந்தச் சிறுவன் செல்லும் போது பதுளையில் இருந்து கொழும்பு – கோட்டை நோக்கிச் சென்ற ரயில் இவர் மீது மோதியுள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ரம்புக்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகிறனர்.





# தங்காலை கார்ல்டன் இல்லத்தில் மஹிந்தவை சந்தித்தார் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க இன்று தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை சந்தித்தார்.

முன்னாள் அமைச்சர்களான சாகல ரத்நாயக்க மற்றும் ரமேஷ் பத்திரண ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் நீண்ட நேரம் சுமுகமான உரையாடலில் ஈடுபட்டனர் எனவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், காலி, ஹினிதும மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளிலிருந்து இன்றும் ஆதரவாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்க பஸ்களில் தங்காலைக்கு சென்றிருந்தனர்.



# பொலிஸாரின் சுற்றிவளைப்பில் மருதானையில் 30 பேர் கைது

மருதானையில் நேற்று மாலை பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மற்றும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 30 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை இராணுவத்தின் ஆதரவுடன் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் உலக சுற்றுலா தின கொண்டாட்டம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளால், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் மிகுந்த ஆடம்பரமாகவும் விழாவாகவும், நேற்றுக் காலை உலக சுற்றுலா தினம் கொண்டாடப்பட்டது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் திருமதி அனுஷா தமயந்தி, நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது, நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அன்புடன் வரவேற்கப்பட்டு, கேக் மற்றும் தேயிலை அடங்கிய பொதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

அதேநேரம், மலையக மற்றும் நாட்டுப்புற நடனக் கலைஞர்கள் குழுவும், கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த சுற்றுலாப் பயணிகளுக்காக நடனங்களை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் அனுஷா தமயந்தி, இதுவரை 1.67 மில்லியன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள் ளனர் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி நேற்று மதியம் 12:00 மணி வரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க.வுடன் அனைத்து கட்சிகளும் இணைந்தால் அதற்கு ஈடு கொடுக்க எந்த சக்தியாலும் முடியாது

## நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு



ஐக்கிய தேசிய கட்சியுடன் அனைத்து கட்சிகளும் இணைந்தால் வேறு எந்தவொரு அரசியல் சக்தியாலும் அதற்கு ஈடு கொடுக்க முடியாது என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று ஞாயிறுக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏனைய கட்சிகளும் எம்முடன் இணைந்து செயற்பட இணக்கம் தெரிவித்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சியின் முகாமுக்குள் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைக்க முடியுமானால் அங்கிருந்து வெற்றிக்கான பயணத்தை ஆரம்பிக்க முடியும். ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரம் சுமார் 40 லட்சம் வாக்குகள் உள்ளன.

எனவே இந்த 40 லட்சம் வாக்காளர்களையும் ஓரிடத்தில் ஒன்று சேர்க்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான முயற்சிகளில் நானும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றேன். எனவே சகல ஐ.தே.க. ஆதரவாளர்களும் அதில் பங்கேற்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். தலைமைத்துவம் என்பது இங்கு பிரச்சினையல்ல. எனவே இரு கட்சிகளினதும் தலைவர்கள் அந்தப் பதவிகளை வகிக்க முடியும்.

உதாரணமாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் இவ்விரு கட்சிகளின் சார்பாகவும் பொது முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்க நான் தயாராக இருக்கின்றேன். எனவே இணைந்து செயற்படுவதற்கான பல வழிகள் உள்ளன. இதனை நேர்மறையாக மாத்திரமே சிந்திக்க வேண்டும். மாறாக ஒரு சிறு விடயத்தைக் கூட எதிர்மறையான கோணத்தில் பார்க்கக் கூடாது. ஒருமித்த அழைப்பு விடுக்கப்படும் போது ஐ.தே.க. ஆதரவாளர்கள் அதனை ஏற்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

மாகாணசபைத் தேர்தலில் சகல மாகாணங்களுக்கும் இரு கட்சிகளின் சார்பிலும் ஒரே வேட்பாளர் பட்டியலை தயாரிக்க முடியுமெனில் அது நிச்சயம் எமது வெற்றிக்கு வழி வகுக்கும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து சென்ற குழுவினரையே கொண்டுள்ளது. அவ்வாறிருக்கையில் ஏன் எம்மால் இணைந்து பயணிக்க முடியாது? எமது சம்மேளனத்தில் பங்கேற்ற அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து பயணிப்பதே எமது இலக்காகும்.

இவ்வாறு ஐ.தே.க.வுடன் அனைத்து கட்சிகளும் இணைந்தால் வேறு எந்தவொரு அரசியல் சக்தியாலும் அதற்கு ஈடு கொடுக்க முடியாது. இரு கட்சிகளுக்கிடையிலான பிளவினால் சுமார் 15 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்காமலிருக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டால் இலகுவாக எமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்."" என்றார்.



# ஜப்பானிலுள்ள இலங்கை சமூகத்தினருடன் இன்று ஜனாதிபதி டோக்கியோவில் சந்திப்பு

ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று பிற்பகல் அங்கு வசிக்கும் இலங்கை சமூகத்தினரை டோக்கியோவில் சந்தித்துள்ளார். ஜப்பானுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி நேற்று ஜப்பான் சென்றடைந்தார்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசொமடா, ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க மற்றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பளித்தனர்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் மற்றும் ஜப்பானில் உள்ள இலங்கை தூதரகம் இணைந்து ஜப்பானின் ஒசாகாவில் ஏற்பாடு செய்த ‘எக்ஸ்போ 2025’ இலங்கை தின நிகழ்வில் நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, இன்று காலை ஞானை-முளயமய ரயில் நிலையத்திலிருந்து டோக்கியோவுக்குப் பயணமான ஜனாதிபதி, இன்று பிற்பகல் டோக்கியோவில், ஜப்பானில் வசிக்கும் இலங்கை சமூகத்தினரைச் சந்தித்தார்.

தனது விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஜப்பான் பேரரசர் நருஹிட்டோவை சந்திக்க உள்ளதோடு, ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா மற்றும் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் கைத்தொழில்துறை அமைச்சர் உள்ளிட்ட பல முக்கிய அமைச்சர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த உள்ளார்.

இலங்கை மற்றும் ஜப்பான் வர்த்தக சபைகள் இணைந்து டோக்கியோவில் ஏற்பாடு செய்துள்ள இலங்கை முதலீட்டு மன்றத்திலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

# விஜய் கைது செய்யப்படுவாரா? கரூரில் முதல்வர் ஸ்டாலின் பதில்




த.வெ.க. தலைவர் விஜய் கைது செய்யப்படுவாரா என்ற கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

கரூரில் நடைபெற்ற த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரத்தின்போது கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 38 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தியா முழுவதும் இந்த சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனி விமானம் மூலம் நள்ளிரவில் கரூர் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து நலம் விசாரித்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் முதல்வர் ஸ்டாலின் கருத்து தெரிவிக்கையில்,

"மிகுந்த துயரத்தோடு, கனத்த இதயத்தோடு உங்கள் முன்பு நிற்கிறேன். கரூரில் நடந்தது பெருந்துயரம் குறித்து என்னால் பேச முடியவில்லை. நேற்று இரவு 7.30 மணிக்கு கூட்ட நெரிசலில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பலர் மருத்துவமனைக்கு செல்வதாக தகவல் வந்தது. உடனடியாக சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி மற்றும் மாவட்ட ஆட்சியரை அழைத்து மருத்துவமனைக்கு விரைந்து செல்ல அறிவுறுத்தினேன்.

அடுத்த சில மணி நேரத்தில் உயிரிழப்புகள் ஏற்பட்டதாக தகவல் வந்ததையடுத்து, அமைச்சர்களை கரூருக்கு அனுப்பி வைத்தேன். தலைமைச் செயலகத்தில் உடனடியாக அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி கரூரில் உள்ள நிலைமை குறித்து கேட்டறிந்தேன். அருகாமை மாவட்டங்களில் உள்ள அதிகாரிகளையும் உதவிக்கு அனுப்பி வைத்தேன். இந்த சம்பவத்தில் 39 உயிர்களை இழந்துள்ளோம். அந்த கொடூரமான காட்சிகளை தொலைக்காட்சியில் பார்த்தபோது எனக்கு மனசு கேட்கவில்லை. வீட்டில் இருக்க முடியவில்லை. அதனால் தான் இரவு 1 மணி அளவில் புறப்பட்டு கரூர் வந்தேன்.

ஒரு அரசியல் கட்சி நடத்திய கூட்டத்தில் இத்தனை உயிர்கள் பலியானது இல்லை. இனிமேல் இது நடக்கக்கூடாது. இறந்தவர்கள் குடும்பத்துக்கு கனத்த இதயத்தோடு அஞ்சலி செலுத்தினேன். இறந்தவர்கள் குடும்பத்திற்கு 10 லட்சம், காயமடைந்தவர்களுக்கு 1 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிட்டேன். அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசியல் நோக்கத்தோடு எதையும் சொல்ல விரும்பவில்லை. ஆணையம் சொல்லும் அறிக்கை அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் யார் கைது செய்யப்படுவார்கள்? என்று நீங்கள் கேட்பதற்கு எல்லாம் நான் என்னை உட்படுத்த தயாராக இல்லை" என்றார்.

"கேட்ட இடத்தை தரவில்லை, பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாக கூறப்படுகிறதே..?" என்ற செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்காமல் சென்று விட்டார்.

# கரூர் நெரிசலில் சிக்கி ஒரே ஊரைச் சேர்ந்த 3 சிறுமிகள் உட்பட 5 பெண்கள் உயிரிழப்பு




கரூர் வேலுச்சாமிபுரத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசல் காரணமாக 5 சிறுமிகள், 5 சிறுவர்கள், 16 பெண்கள், 13 ஆண்கள் என மொத்தம் 39 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்நிலையில், உயிரிழந்தவர்களில் 5 பேர் கரூர் அருகே ஏமூர் என்ற ஊரை சேர்ந்தவர்கள். அவர்களில் ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், 2 மகள்கள் உயிரிழந்துள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

கரூர் அருகே ஏமூரில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஹேமலதா (வயது 28), மகள்கள் சாய் லக்ஷணா (வயது 9), சாய் ஜீவா (வயது 5) உயிரிழந்துள்ளனர். மேலும், ஏமூரை சேர்ந்த டாஸ்மாக் மேற்பார்வையாளர் சக்தி என்பவரின் மனைவி பிரியா, இவர்களது மகள் தரணிகா ஆகிய இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

கரூரில் ஒரே ஊரை சேர்ந்த 5 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அவர்கள் கூறியது 10 ஆயிரம் பேர் ஆனால் 27 ஆயிரம் பேர் வந்தனர்

## பொலிஸ் அதிகாரி தகவல்





த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்துக்கு 10 ஆயிரம் பேர் வருவார்கள் என்று அனுமதி கோரப்பட்ட நிலையில், அங்கு 27 ஆயிரம் பேர் வந்தனர் என டி.ஜி.பி. வெங்கடராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பொறுப்பு டி.ஜி.பி. வெங்கடராமன் கருத்து தெரிவிக்கையில்,

“கரூரில் நடந்தது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. தற்போது வந்த தகவல்களின் அடிப்படையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38. அதில் ஆண்கள் 12, பெண்கள் 16, குழந்தைகள் 10. இந்த சம்பவம் குறித்து தெரிந்தவுடன் பொலிஸ் சார்பாக ஆலோசனை நடத்தி சம்பவ இடத்தி 2000 பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் திருச்சியிலும், திருவாரூரிலும், நாகையிலும் வந்த கூட்டத்தை மனதில் வைத்துதான் அவர்கள் கேட்டதை விட பெரிய இடமாக இருக்கும் என்றுதான் இந்த இடத்துக்கு காவல்துறை அனுமதி கொடுத்தது. இதே இடத்தில் இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு மாநில கட்சி பரப்புரை செய்திருக்கிறது. அவர்கள் சொன்னது 10 ஆயிரம் பேர் வருவார்கள் என்பதாக. ஆனால் வந்ததோ 27 ஆயிரத்துக்கு மேல். அதை முன்கூட்டியே மனதில் வைத்துதான் 500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நண்பகல் 12 மணிக்கு விஜய் வருவார் என்று த.வெ.க. தலைமைக் கழக சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 11 மணி முதலே கூட்டம் சேரத் தொடங்கியது. ஆனால் அவர் வந்ததோ இரவு 7.40 மணிக்கு. காலையிலிருந்து அங்கே காத்திருந்த மக்களுக்கு சரியான முறையில் உணவு, தண்ணீர் கிடைக்கவில்லை. இதில் யாரையும் குறை சொல்லமுடியாது.

அவர் வரும்போதே கூட்டம் பின்னாலேயே வந்துகொண்டிருந்தது. ஊருக்குள் பொலிஸார் மிகவும் கஷ்டப்பட்டு கூட்டத்தை அழைத்து வந்தனர். இதனை விஜய்யும் குறிப்பிட்டு பொலிஸாருக்கு நன்றி தெரிவித்திருந்தார். இப்போது இந்த சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.” என்று தெரிவித்தார்.




# பலதரப்பு வர்த்தக முறையை ‘பிரிக்ஸ்’ பாதுகாக்க வேண்டும்

## வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

இறக்குமதி வரிகளின் ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில், பலதரப்பு வர்த்தக முறையை பிரிக்ஸ் நாடுகள் பாதுகாக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்துக்கு இடையே நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் தான் ஆற்றிய உரை தொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள ஜெய்சங்கர்,

“உலகம் பன்முகத்தன்மை நெருக்கடியை சந்தித்து வருகிறது. இந்நிலையில், பிரிக்ஸ் நாடுகள் ஆக்கப்பூர்வமான மாற்றத்துக்கான வலுவான குரலாக உள்ளன.

உலகம் கொந்தளிப்பாக இருக்கிறது. இந்த தருணத்தில், அமைதியை கட்டமைத்தல், உரையாடல், ராஜதந்திரம், சர்வதேச சட்டத்தை கடைப்பிடிப்பது ஆகிய வற்றுக்கு பிரிக்ஸ் நாடுகள் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

ஐ.நா சபையின் முக்கிய அங்கமாக உள்ள ஐநா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தப்படுவதற்கு பிரிக்ஸ் நாடுகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுக்க வேண்டும்.

பாதுகாப்பு வாதம், இறக்குமதி வரி ஏற்ற இறக்கம், வரி அல்லாத தடைகள் போன்றவை வர்த்தக ஓட்டங்களை பாதிக்கின்றன. எனவே, பலதரப்பு வர்த்தக அமைப்பை பிரிக்ஸ் பாதுகாக்க வேண்டும்.

தொழில்நுட்பமும் புதுமையும் பிரிக்ஸ் ஒத்துழைப்பின் அடுத்த கட்டத்தை வரையறுக்கும். உணவு பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, காலநிலை மாற்றம், டிஜிட்டல் மாற்றம், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், புதுமை ஆகியவற்றில் இந்தியா கவனம் செலுத்தும்.” என தெரிவித்துள்ளார்.



# காஸா மீது இஸ்ரேலின் மீண்டும் தாக்குதல்கள்

## 38 பேர் உயிரிழப்பு

காஸா மீது இஸ்ரேல் மீண்டும் துப்பாக்கிச் சூடு மற்றும் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலில் 38 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

காஸா மீதான இஸ்ரேலின் போரானது, பலஸ்தீனர்களுக்கு எதிரான இனப்படுகொலை என நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது அவைக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால், உடனடியாகப் போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டு உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் காஸாவினுள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மத்திய மற்றும் வடக்கு காஸாவில் இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் வான்வழித் தாக்குதல்களில் 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில், நுசைராத் அகதிகள் முகாமில் வசித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேரும் கொல்லப்பட்டனர் என அங்கு செயல்படும் சுகாதார அமைப்புகள் தெரிவித்துள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போரில் சுமார் 65,000 இற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







கனடா முரசு
பக்கங்கள் 02
ஞாயிற்றுக்கிழமை 28/09/2025

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் விமான விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் இடம்பெற்ற சிறிய விமான விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாங்கூவரிலிருந்து வடகிழக்கே 250 கிலோ மீற்றர் 03




# பொலிஸாரை மிரட்டிய சிறுவன் ஒருவர் கைது

கனடாவின் மொன்ரியல் நகரத்தின் தெற்குக் கரை பகுதியில், பொலிஸாரை மிரட்டிய சிறுவனை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட மற்றொரு இளைஞரின் மரணத்தின் பின்னர் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. 03

# கனடாவில் ஓய்வுபெறவிருக்கும் அதிகளவிலான பணியாளர்கள்



கனடா, சில்வர் சுனாமி என்னும் வெள்ளி சுனாமி, அல்லது சாம்பல் சுனாமி என்னும் ஒரு விடயத்தை எதிர்கொள்ள இருக்கிறது.

1946இற்கும் 1964 இற்கும் இடையில் பிறந்த Baby boomers என அழைக்கப்படும் தலைமுறையைச் சேர்ந்தவர்கள், முதிர் வயதை அடையும் ஒரு நிலையே மக்கள்தொகை தொடர்பில் வெள்ளிசுனாமிஎன அழைக்கப்படுகிறது.

அதாவது, இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலகில் பிறந்த மக்கள் வேலைக்குச் செல்லத் துவங்கிய நிலையில், தற்போது, அவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் பணி ஓய்வுபெறும் வயதை எட்டியுள்ளார்கள்.

கனடாவும் இதற்கு விதிவிலக்கல்ல. 2030 ஆம் ஆண்டுவாக்கில், அவர்கள் அனைவரும் ஓய்வுபெற்றுவிடுவார்கள்.

விடயம் என்னவென்றால், பணியாளர்கள் ஓய்வுபெறும்போது, 03



# 107 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார் மூதாட்டி

கனடாவின் பார்ஹேவன் பகுதியைச் சேர்ந்த மரியன் ஆண்டர்சன் என்ற மூதாட்டி தனது 107 ஆவது பிறந்த நாளை உறவினர்களும் நெருங்கிய தோழர்களும் சூழக் கொண்டாடி மகிழ்ந்துள்ளார்.

பிறந்த நாள் கொண்டாட்டங்களில் பலர் பங்கேற்றது மகிழ்ச்சி அளிப்பதாக மூதாட்டி மரியன் தெரிவித்துள்ளார்.

1918 ஆம் ஆண்டு பிறந்த ஆண்டர்சன், 1940 இல் ஒட்டாவாவில் சிகை அலங்காரப் பணியைத் தொடங்கினார்.

அங்குதான் தனது கணவரை சந்தித்ததாகவும் இருவரும் சேர்ந்து மூன்று மகன்களை வளர்த்து, வெஸ்ட் பரோ மற்றும் கார்லிங்வுட் பகுதிகளில் வாழ்ந்தாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், தன் தோல் பராமரிப்பு பழக்கம் தான் வயதுக்கு குறைவாகத் தோற்றமளிக்கச் செய்தது என்றும் நகைச்சுவையாக குறிப்பிட்டார்.

“முகத்தில் அதிக சோப்பை பயன்படுத்த வேண்டாம் அது சுருக்கங்களை உண்டாக்கும்,” என குறிப்பிட்டுள்ளார்.

விழாவில் அவரின் குழந்தைகள், பேரக்குழந்தைகள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் பங்கேற்று மகிழ்ந்தனர். மரியன் ஆண்டர்சன் தனது வாழ்க்கையில் பல வரலாற்றுச் சம்பவங்களை நேரடியாக கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த இடத்தை நிரப்பும் அளவுக்கு இளைஞர்கள் இல்லை.

அதைவிட கவலைக்குரிய விடயம் என்னவென்றால், கனடாவில் பிறப்பு வீதமும் குறைந்துவருகிறது.

கனடா, கனேடிய இளைஞர்களின் வேலைக்கும், வீடுகளுக்கும் போட்டிக்கு வருவதாகக் கூறி புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்துவதில் குறியாக உள்ளது.

ஆனால், ஒரு கட்டத்தில் வேலையிலிருக்கும் பணியாளர்கள் அனைவரும் ஓய்வு பெற்றபின், அந்த இடத்துக்கு போதுமான இளைஞர்களும் இல்லாத நிலையில் கனடா என்ன செய்யப்போகிறதோ தெரியாது.

## பிரிட்டிஷ் கொலம்பியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொலைவில் உள்ள லிலூயெட் பகுதியில் புதன்கிழமை மாலை ஒரு சிறிய விமானம் விபத்துக்குள்ளானது.

இதில் விமானத்தை ஓட்டிய ஒரே நபர் உயிரிழந்ததாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

லிலூயெட் விமான நிலையத்திற்கு அருகில் விமானம் தரையில் மோதி விழுந்ததாக உள்ளூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமானியை விமானத்திலிருந்து மீட்டபோது அவர் மயக்க நிலையில், உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் இருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிர் காப்பாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் விபத்து இடத்திற்கு விசாரணை குழுவை அனுப்பியுள்ளது.

புஷ்மாஸ்டர் சுபர் 22 22 என்ற சிறிய விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விசாரணை அதிகாரிகள் விபத்துக்கான காரணங்களை ஆராயும் நிலையில், ஆரம்பக் கணக்கெடுப்பு முடியும் வரை கூடுதல் தகவல்கள் வெளியிடப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கைது, கடந்த ஞாயிற்றுக்கிழமை ப்ரோசார்டில் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட நூரான் ரெசாயி சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

15 வயதான சிறுவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சிறுவன் பின்னர் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அல்லது பொதுமக்கள் மீதான மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் தொடர்பில் விசேட கரிசனையுடன் கண்காணிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இணைய வழியில் மிரட்டல் விடுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி மற்றும் அவரது குடும்பத்திற்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.